உயர்திரு விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிபதி நீதிமன்றம்

O.S. 9 /2022

முருகன் ------ வாதி

எதிர்

1. மங்கை
2. சிலம்பரசன்
3. ரஞ்சிதா
4. ராஜபாண்டி ------ பிரதிவாதிகள்

Dw-1 பிரமாணவாக்குமூலம்

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் வட்டம், இருந்தை அஞ்சல், சின்னஆணைவாரி கிராமத்தில் வசிக்கும் ஜெயராமன் குமாரர் இந்து சுமார் 36 வயதுள்ள சிலம்பரசன் ஆகிய நான் பிரமாணத்தின் பேரில் கொடுத்துகொண்ட வாக்குமூலம்.

நான் மேற்படி அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி. என் தரப்பு முதல் சாட்சி.

1. மேற்படி வழக்கில் எனது மற்றும் 3, 4 பிரதிவாதிகளின் தந்தை ஜெயராமன் 20.06.2019 அன்று வாதியிடம் ரூ.12,00,000/- (ரூபாய் பனிரெண்டு லட்சம் மட்டில்) வீடு கட்டிய வகையில் ஏற்பட்ட கடனை அடைக்கவேண்டியும், ஜெயராமன் அவரது மகளின் திருமண செலவிற்காகவும் பெற்றுக்கொண்டு வாதி பேருக்கு 12% வட்டி சேர்த்து கொடுப்பதாகவும், அதாவது வாதி வேண்டும் போது அல்லது

வாதியிடமாவது வாதியின் உத்தரவு பெற்றவரிடமாவது கொடுத்து பைசல் செய்வதாய் சம்மதித்து பிராம்சரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்று கூறுவது உண்மைக்கு புறம்பானது. மேலும் மேற்படி பிராம்சரி நோட்டில் நான் 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது. அவ்வாறு நான் பிராம்சரி நோட்டில் சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை. மேற்படி வழக்கு வாதி அவருக்கு வேண்டியவர்களை வைத்து பிரதிவாதியின் தகப்பனாரின் கையெழுத்து மற்றும் எனது கையெழுத்துபோல தயாரித்து மோசடியாக எங்களை ஏமாற்றவும் எங்களுக்கு பாத்தியமான சொத்தை அபகரிக்கவும் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்கண்ட தேதியிலோ அல்லது வேறு தேதியிலோ எனது தந்தை வாதியிடம் எந்தவிதமான பணமும் பெற்றுக்கொண்டதில்லை. அதற்காக பிராம்சரி நோட்டும் எழுதிக்கொடுத்ததில்லை என நான் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். எனது தகப்பனார் மேற்படி தொகையை கடனாக வாங்கவேண்டிய அவசியமும் என் தகப்பனாருக்கு இல்லை. எனது தந்தை வாதியிடம் எவ்வித கடனும் வாங்காத நிலையில் அசல் வட்டி திரும்ப செலுத்தவேண்டும் என்ற அவசியம் ஏற்படவில்லை. எனது தந்தை கடந்த 28.05.2021 தேதியில் காலமாகிவிட்டார் என்பது உண்மை. நான், வாதியிடம் எனது குடும்ப செலவிற்காக மே மாதம் 2017ல் ரூ.2,00,000/- கடனாக பெற்றுள்ளேன். அதே போல் 11.09.2019ல் நான், வாதியிடம் எனது குடும்ப செலவிற்காக ரூ.1,00,000/- கடனாக பெற்றுள்ளேன். மேற்படி தொகைகளுக்கு கடன் பெற்ற தேதியிலிருந்து மாதாமாதம் 36% வட்டி ஆகஸ்ட் 2021 வரை வட்டி செலுத்தியுள்ளேன். அதன்பின்னர் என்னால் வட்டி செலுத்த இயலாத நிலை ஏற்பட்டது. மேற்படி 11.09.2019 தேதியில் பெற்ற கடனுக்கு வாதி பச்சை பேப்பரில், மேற்படி பச்சை பேப்பரை

J. silmm

இரண்டாக மடித்து ஒரு பக்கத்தில் இரண்டு வருவாய் வில்லை ஒட்டி என்னிடம் கையெழுத்து பெற்றுள்ளார். மேற்படி பிராம்சரி நோட்டில் சாட்சி என எனது தந்தையிடம் வாதி பச்சை பேப்பரில் சாட்சியாக என சாட்சி கையெழுத்து பெற்றுள்ளார். மேலும் நான் மடித்த பச்சைபேப்பரில் மேல்புரம் தேதி மற்றும் கடனாக பெற்ற தொகையை எழுதியுள்ளார். மேலும் எனது தந்தை எந்த காலத்திலும் பணம் கடனாக பெற்றதில்லை. மேலும் எனது தந்தை கடனாக ரூ.12,00,000/- பெறவில்லை என்பதால் நாங்கள் மேற்படி தொகையை ஆண்டு 1க்கு 12% வட்டியுடன் சேர்த்து வட்டி செலுத்தவேண்டிய அவசியமில்லை. மேலும் எனது தந்தை சாட்சியாக செய்த கையெழுத்தை பார்த்து வாதி அதேபோல் பிராம்சரி நோட்டில் வாதி தனக்கு வேண்டியவர்களை கொண்டு கையெழுத்து மோசடியாக போட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வாதி தாக்கல் செய்துள்ள பிராம்சரி நோட்டினை பரிசீலனை செய்ததில் மேற்படி பிராம்சரி நோட்டில் வருவாய் வில்லைகளில் உள்ள கையெழுத்து மற்றும் அதன் கீழே உள்ள கையெழுத்து எனது தகப்பனாரின் கையெழுத்து இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மற்ற பிரதிவாதிகளும் மேற்படி கையெழுத்து ஜெயராமன் கையெழுத்து இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறார்கள். மேலும் குறிப்பாக மேற்படி பிராம்சரி நோட்டில் 1வது சாட்சியாக உள்ள கையெழுத்து எனது கையெழுத்து இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 2வது சாட்சியாக பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் எழுதியது உட்பட என்கிற இடத்தில் கையெழுத்து செய்த நபர் யாரென தெரிவிக்கும் பட்சத்தில் மேற்படி நபர்களுக்கும் வாதிக்கும் என்ன உறவு என்பதையும் அவர்கள் எந்த வகையில் பிரதிவாதிகளுக்கு விரோதமானவர்கள் என்பதை பொருத்து

J. [signature]

தெரிவித்துக்கொள்ள இயலும் என்பதை ஆட்சேபனையில் தெரிவித்திருந்தேன். ஆனால் விசாரணையின் போது சாட்சிகளாக அவர்கள் விசாரிக்கப்பட்டார்கள் அதற்குமுன்னதாக அவர்கள் விவரம் வாதியால் தெரியப்படுத்தபடவில்லை. மேலும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட செந்தில் மற்றும் சீனுவாசன் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் சீனுவாசன் வாதியின் மைத்துனர் என்பதாலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த பிரமாணவாக்குமூலத்தில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட அம்சங்களை தவிர்த்து இதர வாதி தாவா மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ள அம்சங்களை திட்டவட்டமாகவும் குறிப்பாகவும் நான் மறுதளிக்கிறேன்.

ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் வாதி தாக்கல் செய்துள்ள தாவாவை எனது செலவுடன் தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

மேற்கண்ட நபர் மேற்கண்ட
அம்சங்கள் உண்மையென்று என்
முன்பாக கையெழுத்து செய்தார்.
விழுப்புரம்.

07.01.2026

J. Sikhamani

Before me
M. Vijay MS/8023/22
Advocate

PRL. DISTRICT AND SESSIONS COURT
VILLUPURAM
RECEIVED
07 JAN 2026
SHERISTADAR